# 2

# கிறிஸ்துவுக்குள் புதிய மக்கள்

*''இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின '' (2 கொரி. 5:17).*

புதிய தன்மையை ஒவ்வொருவரும் மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர். அது ஒரு புதிய குழந்தையாகவோ, ஒரு புதிய கார் ஆகவோ, ஒரு புதிய வீடாகவோ அல்லது வெறுமனே புதிய காலுறைகளாகவோ இருப்பினும் புதியவைகளின் புத்தம் புதுத் தன்மை மற்றும் வலிமைத் தன்மை ஆகியவற்றினால் நாம் எப்பொழுதுமே மனக் கிளர்ச்சியடைகின்றோம்.

"புதிய" என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்த ஒரு வார்த்தைக்கு கிரேக்க மொழியில் இரண்டு வார்த்தைகள் உள்ளன. அவற்றில் ஒன்று, "புதிய காலம்" என்று அர்த்தப்படும் neos என்ற வார்த்தையாகும். இந்த வார்த்தையைப் பயன்படுத்தி நாம் புதிதாய்ப் பிறந்த ஒரு குழந்தையை ''அவன் ஒரு புதிய மனிதன்'' என்று கூற முடியும். இப்பொழுதுதான் கட்டப்பட்டு, ஒருவரும் ஒருபோதும் வாழ்ந்திராத ஒரு வீட்டைப் பற்றி நாம் இவ்வார்த்தையைப் பயன்படுத்தி "இது ஒரு புதிய வீடாக உள்ளது" என்று கூற முடியும். குழந்தையும் வீடும் உண்மையிலேயே ''காலத்தில் புதியதாக'' இருக்கின்றன. அவைகள் நீண்ட காலமாக இருந்ததில்லை.

*Kainos* என்பது அடிப்படையில் ''தரத்தில் புதிய தன்மை'' என்று அர்த்தப்படும் இன்னொரு கிரேக்க வார்த்தையாகும். இதைக் கொண்டு நாம், புதுப்பிக்கப்பட்ட ஒரு பழைய வீட்டை, "இது ஒரு புதிய வீடாக உள்ளது" என்று கூறமுடியும். பழைய கார் ஒன்றுக்கு ஒரு புதிய மோட்டார் பொருத்தப்பட்டு, புதிய டயர் தொகுதியைப் பொருத்தி, அந்தக் காருக்கு வண்ணம் தீட்டிய நிலையில், "இது ஒரு புதிய காராக உள்ளது'' என்று கூறுவதற்கு நாம் இதைப் பயன்படுத்த முடியும். இந்த வீடும் காரும் ''காலத்தில் புதிதாக'' இருப்பதில்லை, ஆனால் அவைகள் ''தரத்தில் புதியதாக" உள்ளன. அவைகளுக்குப் புதிய வாழ்வு கொடுக்கப்பட்டுள்ளது. அவைகள் மறுபடி செய்யப்பட்டுள்ளன.

இரண்டாவது வார்த்தையான kainos என்பதுதான் 2 கொரி. 5:17ல்

பவுலினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மை நிலையில் இந்த வாக்கியமானது, "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவன் தரத்தில் புதிய நபராயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின; தரத்தில் புதியவைகள் வந்துள்ளன" என்று மொழிபெயர்க்கப்பட முடியும். நாம் மீண்டும் ஒரு காலத்தில் (புதிதாகத்) தொடங்க முடியும் என்று பவுல் கூறவில்லை, ஆனால் தரத்தில் புதிய தன்மையுடன் நாம் தொடங்க முடியும் என்று அவர் வெளிப்படுத்தினார். எலிசபெத் ஏக்கர்ஸ் ஆலன் அவர்கள் பின்வருமாறு கூறியது போல பவுல் நாம் செலவிட்ட காலத்திற்கான நமது விருப்பத்திற்காகக் குரல் கொடுக்கவில்லை:

> பின் செல், திரும்பிப் பின்செல்,
> ஓ காலமே, உன் ஓட்டத்தில்
> இன்றிரவுக்கு மட்டுமே என்னை
> மீண்டும் ஒரு குழந்தையாக்கி!

இதற்கு மாறாகப் பவுல், "உங்கள் வாழ்வு எத்தகையதாக இருப்பினும், அது புதிதாக்கப்பட முடியும், நீங்கள் ஒரு இழப்பாளராக இருந்திருந்தால், நீங்கள் ஒரு வெற்றியாளராக முடியும். நீங்கள் ஆவிக்குரிய வகையில் மரித்தவராயிருந்தால், நீங்கள் வாழ்விக்கப்பட முடியும்" என்று கூறினார்.

கிறிஸ்துவின் மூலம் புதிதாக்கப்பட்ட மக்கள் என்ற சரீரத்தைக் கொண்டதாகவே சபை உள்ளது. அவர்கள் பாவத்தில் மரித்திருந்த மக்களாய் இருந்தார்கள், ஆனால் சுவிசேஷத்தினால் உயிர்ப்பிக்கப்பட்ட மக்களானார்கள். கொலோசெயில் இருந்த சபைக்குப் பவுல், "உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து" (கொலோ. 2:13) என்று கூறினார். கிறிஸ்தவர்களுக்கு, கிறிஸ்துவுக்குள் புது வாழ்வு கொடுக்கப்பட்டிருந்தாலும், அந்தப் புதிய வாழ்வானது பாவத்தினால் களவு செய்யப்படாதபடிக்கு அவர்கள் கவனமாய் இருக்க வேண்டும். எபேசியர் களுக்குப் பவுல், "அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" (எபே. 4:22-24) என்று புத்தி கூறினார்.

தேவன் கொடுக்கின்ற தரத்தில் புதியதான இந்த வாழ்வைப் பற்றிய தகுதியான கேள்வியொன்று பின்வருமாறு: "தேவன் இதை எவ்விதம் கொடுக்கின்றார்?" அல்லது வேறு வகையில் கேட்பதென்றால், "கிறிஸ்து வுக்குள் நம்மைப் புதுப் படைப்பாக்குவதற்கு தேவன் பயன்படுத்துகின்ற செயல்முறை என்ன?" இந்தக் கேள்விக்கு ரோமர் 6ல் பவுலினால் பதில் அளிக்கப்படுகின்றது.

ரோமர் 1-3ல் பவுல், மக்கள் எவ்விதத்தில் இரட்சிக்கப்படுகின்றனர்

*அல்லது தேவனுக்கு முன்பாகக் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தினால் அவர்கள் எவ்விதம் நீதிமான்களாக்கப் படுகின்றனர் என்பதை விளக்கி உரைத்தார். ரோமர் 4ல் அவர் விசுவாசமானது ஆபிரகாம் என்ற மனிதரை எவ்விதத்தில் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கிற்று என்ற எடுத்துக்காட்டு ஒன்றைக் கொடுத்தார். பின்பு ரோமர் 5-8ல் பவுல், இரட்சிப்பிலிருந்து இயற்கையாக வளரக்கூடிய ஆசீர்வாதங்களை ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டார்: நாம் தேவனுடன் சமாதானமாயிருப்பதைப் பெறுகின்றோம் (5); நாம் மன்னிக்கப்படுகின்றோம் (6); நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இராமல், கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின்கீழ் இருக்கின்றோம் (7); மற்றும் நாம் ஜீவனைப் பெற்றுள்ளோம் (8).*

*ரோமர் 6ல் கிறிஸ்துவின் மூலம் பாவத்திலிருந்து நாம் பெற்ற விடுதலையை விளக்குகையில், தேவன் எவ்விதத்தில் நம்மைப் புதிய மக்களாக்கினார் என்று அவர் விவரித்தார். என்னுடன் ரோமர் 6க்கு வாருங்கள், தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மை எவ்விதத்தில் புதிய நபர்களாக்கு கின்றார் என்று நாம் காண்போம். பவுலினால் முன் வைக்கப்படுகின்றபடி, இந்தச் செயல்முறையானது நிலைகளாகப் பிரிக்கப்பட முடியும். வண்ணத்துப் பூச்சியின் வளர்ச்சியில் அறிவியல் அறிஞர்கள் மூன்று மாறுபட்ட நிலைகளை வகையறுத்துள்ளனர்: முட்டை நிலை, லார்வா - கூட்டுப் புழு நிலை, பியூப்பா - வளர்ந்த நிலை. இதே போன்ற ஒரு வழிமுறையில், கிறிஸ்துவுக்குள் நாம் புதிய மக்களாவதில் மூன்று நிலைகளை அடையாளப்படுத்த முடியும். இவைகளில் ஏதேனும் ஒரு நிலை விட்டு விடப்பட்டதென்றால், நாம் இந்தச் செயல்முறையைச் சிதைத்து விடுவோம். நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய நபராயிருக்க முடியும்; ஆனால் முற்றிலுமாகப் புதியவராவதற்கு நீங்கள் தேவனுடைய மறுவுருவாக்கச் செயல்முறைக்கு உங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும்.*

*தேவன் ஒருவரை எவ்விதத்தில் ஒரு புதிய நபராக்குகின்றார்?*

## *நிலை ஒன்று: பிரிதல்*

*புதியதொரு வாழ்வுக்கான பயணத்தில் பிரிதல் நிலை என்பதே முதல் நிலையாக உள்ளது. தேவனுடைய மறுவுருவாக்கச் செயல்முறைக்குப் பாவத்தில் இருந்து பிரிதல் என்பது அவசியமானதாயிருக்கின்றது.*

*பவுல், "ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" என்று எழுதினார் (ரோமர் 6:1, 2). ''பாவத்துக்கு மரித்த'' என்ற வார்த்தைகளை எச்சரிக்கையாகக் கவனியுங்கள். முந்திய அதிகாரமான ரோமர் 5ல், பவுல் தேவனுடைய கிருபையை முக்கியத்துவப்படுத்தியிருந்தார். பாவம் பெருகின இடத்தில் கிருபை பெருகினது என்று அவர் காண்பித்திருந்தார் (வ. 20, 21). அவர், "நமது பாவம் என்ற பிரச்சனையைத் தேவன் தம்முடைய கிருபையினாலே வெற்றி கொண்டார், மற்றும் இந்த வழிமுறையினால் அவர் உண்மையில் தாம் எவ்வளவு பெரியவர் என்பதைச்*

*சுட்டிக்காட்டியுள்ளார்" என்று கூறினார். சிலருக்கு இந்த சத்தியத்தைத் தவறாகப் புரிந்து கொள்வது சுலபமாயிருக்கும். எடுத்துக்காட்டாக, சிலர் "கிருபை பெருகுவதற்கு நாம் ஒருவேளை தொடர்ந்து பாவத்தில் நிலைநிற்க வேண்டியிருக்கும். நாம் வெற்றி கொள்ள வேண்டிய மாபெரும் பாவப் பிரச்சனையைக் கொண்டிருந்தால், தேவன் நம்மை இரட்சிப்பதற்கு அதிகமான கிருபையை வெளிப்படுத்த வேண்டியிருக்கும், இந்த மாபெரும் கிருபையினால் அவர், தாம் எவ்வளவு பெரியவர் என்பதை இன்னும் சிறப்பாகச் சுட்டிக்காட்டுவார்" என்று கூற முடிந்தது. இந்தத் தவறான புரிந்து கொள்ளுதலைப் பவுல் முன்னதாகவே எதிர்பார்த்து ரோமர் 6ன் தொடக்கத்தில் இதன் தொடர்பாகக் கேள்வியொன்றை எழுப்பினார்: "கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா?" இந்தக் கேள்விக்கு "கூடாதே" என்று அவரே வலிவான அழுத்தத்துடன் பதில் அளித்தார். பின்பு அவர், "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" என்று கேட்டார். இதை இன்னொரு வழிமுறையில் இடுவதற்கு, நாம், "கிறிஸ்தவர் பாவத்திற்கு மரித்திருப்பதால், அவர் பாவத்தில் வாழ்வது தகுதியாயிருக்கலாகாது?" என்று சொல்ல முடியும்.*

---

*பவுலின் கூற்றுப்படி, நாம் கிறிஸ்துவுக்குள்*
*ஞானஸ்நானம் பெறும் வரைக்கும் பாவத்திற்கான*
*நமது மரணம் நிறைவடைவதில்லை.*

---

*பவுலின் கூற்றுப்படி பாவத்திற்கு நாம் மரித்தது என்பது கிறிஸ்துவுக்குள் நாம் ஞானஸ்நானம் பெறும் வரைக்கும் நிறைவடையப்படுவதில்லை. ரோமர் 6:4ல் அவர், பாவத்திற்கான நமது ஆவிக்குரிய சொந்த மரணத்தில் நாம் ஞானஸ்நானப்படுத்தப்படுகின்றோம் என்று கூறினார். இருப்பினும் பாவத்திற்கான நமது சொந்த மரணத்திற்குள்ளாக்கும் இந்த ஞானஸ் நானத்திற்கு முன்பு, விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் இயேசுவை அறிக்கையிடுதல் ஆகியவற்றினால் பாவத்திலிருந்து பிரிதல் நடைபெற வேண்டும். இந்த வசனப் பகுதியில் பவுல் பாவத்திலிருந்து பிரிதல் என்ற நிலைக்குத் தாமாகவே செல்லவில்லை; அவர் தமது குறிப்பின் மூலமாக பாவத்திற்கு நாம் மரிப்பதையே மறைமுகமாய்க் குறிப்பிட்டார். பாவத்துக்கு மரித்தல் என்பதினால் மறைமுகமாகக் குறிப்பிடப்படுகின்ற இந்த பாவத்தில் இருந்து பிரிதல் என்பது தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் உள்ள விசுவாசத்தினால் (அப். 15:9) மனந்திரும்புதலினால் (1 தெச. 1:9), மற்றும் இயேசுவைக் கிறிஸ்து என்றும் கர்த்தர் என்றும் அறிக்கையிடு தலினால் (ரோமர் 10:10) விளைவுண்டாக்கப்படுகின்றது.*

*சுவிசேஷத்தின் தொடக்க காலப் பிரசங்கியார்களில் சிலர், ஒருவர் கிறிஸ்தவராகையில் நடக்கின்ற முக்கியமான நான்கு மாற்றங்களைச் சுட்டிக் காட்டினார். இருதயத்தின் சுத்திகரிப்பு என்ற இருதய மாற்றம் முதலாவது*

மாற்றமாக உள்ளது. இந்த மாற்றமானது கிறிஸ்துவில் கொண்டுள்ள விசுவாசத்தினாலே உண்டாக்கப்படுகின்றது. புறஜாதிகளைப் பற்றிப் பேதுரு, "விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்" (அப். 15:9) என்று கூறினார். பாவத்தை நடப்பித்தலில் இருந்து வாழ்வைத் துப்புரவாக்குகின்ற *வாழ்க்கையில் மாற்றம்* என்பது இரண்டாவது மாற்றமாக உள்ளது. மனந்திரும்புதல் என்பது வாழ்வில் மாற்றம் அல்லது சீர்திருத்தத்தை விளையச் செய்கின்ற விருப்பத்தில் ஏற்படும் ஒரு மாற்றமாக உள்ளது (அப். 11:18). ஒருவருடைய நம்பிக்கை மற்றும் பற்றுறுதியை அறிக்கையிடுதலாகிய *மதிப்பில் ஏற்படும் மாற்றம்* என்பது மூன்றாவது மாற்றமாக உள்ளது. இந்த மாற்றத்தில் இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும் கர்த்தர் என்றும் அறிக்கையிடுதலால் விளைவு உண்டாக்கப் படுகின்றது (ரோமர் 10:10). ஒருவரைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குதல் என்ற *நிலைமாற்றம்* என்பது நான்காவது மாற்றமாக உள்ளது. ஞானஸ் நானத்தின்போது இந்த மாற்றம் நடக்கின்றது (ரோமர் 6:3). இந்த நான்கு மாற்றங்களில் முதல் மூன்று மாற்றங்கள் "பாவத்துக்கு மரித்த" என்ற பவுலின் சொற்றொடரில் மறைமுகமாய்க் குறிப்பிடப்படுகின்றது, மற்றும் நான்காவது மாற்றமானது ரோமர் 6:4ல் குறிப்பாகக் கூறப்படுகின்றது. பவுலின் கூற்றுப்படி, இந்த நான்கு மாற்றங்களும் அனுபவிக்கப்படும் வரையிலும் பாவத்துக்கு மரித்தல் என்பதன் முழுமையான செயல்பாடு நடந்தேறுவதில்லை.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே முழுக்காட்டப் படுதலினால் ஞானஸ்நானம் பெற்றும், அந்த ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வைக் காட்சிப் படுத்தாமல் இருக்கின்ற மக்களைப் பற்றி நாம் யாவரும் அறிந்திருக்கின்றோம். அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற பிறகும், எவ்வித மாற்றமும் இன்றி தங்களின் பழைய பாவ வாழ்வில் தொடர்ந்து நிலைத்திருக்கின்றார்கள். அவர்களின் வாழ்க்கையைக் காண்கையில் நாம், அவர்கள் ஏன் புதிய வாழ்வில் பிரவேசிக்காமல் இருக்கின்றார்கள் என்று ஆச்சரியப்படலாம். இந்தக் கேள்விக்குக் குறைந்தபட்சம் ஒரு பதிலைப் பவுல் ரோமர் 6ல் தருகின்றார். அவர், "பாவத்திலிருந்து அவர்கள் தங்களைப் பிரித்துக் கொண்டார்களா? தேவனுடைய மறுவுருவாக்கும் செயல்முறைக்கு அவர்கள் தங்களை முழுமையாக ஒப்புக் கொடுத்தார்களா?" என்று கேட்பார். எந்தக் காரணத்தினாலாவது பிரிதல் நிலையானது தவிர்க்கப் பட்டால், ஒருவர் கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வில் பிரவேசிக்க முடியாது.

*நீங்கள் கிறிஸ்துவின் மேலுள்ள உண்மையான நம்பிக்கை, பாவத் திலிருந்து மனந்திரும்புதல், மற்றும் இயேசுவை கிறிஸ்துவென்றும் கர்த்த ரென்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றினால் இந்தப் பிரிதல் நிலையின் வழியாகக் கடந்து சென்றிருக்கின்றீர்களா?*

## நிலை இரண்டு: இரட்சிப்பு

தேவனுடைய மறுவுருவாக்கும் செயல்முறையின் இரண்டாவது நிலையை நாம் இரட்சிப்பு நிலை என்று அழைப்போம். இந்த நிலையில் நாம் உண்மையில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்திற்குள் கொண்டு வரப்படுகின்றோம். இந்த நிலையானது தனிச் சிறந்த வகையில் ஞானஸ்நானத்தைச் சுற்றிச் சுழலுகின்றது.

ரோமர் 6:3, 4ல் பவுல் பின்வருமாறு எழுதினார்:

> கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

ஞானஸ்நானத்தைப் பற்றி இவ்வளவு குறைவான இடத்தில் இவ்வளவு அதிகமாய்ச் சொல்லும் இரண்டு வேத வசனப் பகுதிகளைக் காண புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் பகுதியை நாம் திருப்பிக் காண முடியும்? இந்த இரண்டு வசனங்களில் ஞானஸ்நானத்தைப் பற்றிய நான்கு சத்தியங்கள் தெளிவாக்கப் பட்டுள்ளன.

முதலாவது, ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுக்குள்ளானதென்று பவுல் உரைத்தார்: "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் ..." (வ. 3). ஞானஸ்நானத்தில் நாம் தேவனுடைய கிருபையினால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் கொண்டுவரப்படுகின்றோம். ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுக்கு நமது விசுவாசத்தின் பதில்செயலினுடைய நிறைவுப் பாகமாய் உள்ளது (கலா. 3:26, 27; 2 தீமோ. 2:10).

இரண்டாவது, நாம் "அவருடைய [கிறிஸ்துவினுடைய] மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம்" (வ. 3) பெற்றதாக பவுல் உரைத்தார். புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவின் மரணத்தினுடைய பலன்களுடன் ஒன்றிணைக்கப்படுகின்றோம். இயேசு தம்முடைய மரணத்தின் மூலமாக நமக்கு கிடைக்கச் செய்துள்ள யாவற்றையும் நாம் ஞானஸ்நானத்தில் பெறுகின்றோம்.

மூன்றாவது, நாம் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப் படுவதாகப் பவுல் உறுதிப்படுத்தினார். "... ஞானஸ்நானத்தினாலே அவருடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (வ. 4). புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் என்பது அடக்கம் பண்ணப்படுதல் அல்லது முழுக்காட்டப்படுதல் என்பதாக உள்ளது. Baptizo என்ற இந்த கிரேக்க வார்த்தையானது பெரும் பாலான நமது மொழியாக்கங்களில் மொழிபெயர்ப்புச் செய்யப்படாமல் அது ஒலிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. ஒலிபெயர்ப்பில், இந்த கிரேக்க வார்த்தையானது ஆங்கிலப் படுத்தப்பட்டுள்ளது, அல்லது ஒரு ஆங்கில

வார்த்தையாக மாற்றப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பில் இதற்கு இணையான ஆங்கில வார்த்தையானது மொழிபெயர்க்கப்படும் கிரேக்க வார்த்தைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிரேக்கக் கல்வியறிஞர்களின் கருத்துப்படி, *baptizo* என்ற வார்த்தைக்கு இணையான ஆங்கில வார்த்தை "immerse" ("முழுக்காட்டுதல்") என்பதாகும். *Baptizo* என்பதன் இந்த விளக்க மானது இந்த வார்த்தையைப் பவுல் இவ்வசனத்தில் (மற்றும் கொலோ. 2:12ல்) பயன்படுத்திய வழிமுறையினால் உறுதிப்படுத்தப் படுகின்றது. புதிய ஏற்பாட்டின் ஞானஸ்நானம் ஒரு அடக்கம் பண்ணப்படுதல் அல்லது முழுக்காட்டுதல் என்பதை நாம் உறுதியாய்க் கூறமுடியும்.

நான்காவது, நாம் பாவத்திற்கான நமது சொந்த ஆவிக்குரிய மரணத்தில் ஞானஸ்நானப் படுத்தப்படுகின்றோம் என்று பவுல் எழுதினார். அவர், "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத் தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (வ. 4) என்று கூறினார். பாவத்திற்கான நமது மரணமானது ஞானஸ்நானத்தில் நிறைவடைகின்றது. விசுவாசம், மனந்திரும்புதல், இயேசுவை அறிக்கை யிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலம் "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே" (ரோமர் 6:6, 7).

யோவானால் இயேசு ஞானஸ்நானம் பெற்றது அவரது (இயேசுவின்) வாழ்வில் நிகழ்ந்த பெரும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளில் ஒன்று ஆகும். அவரது பூமிக்குரிய ஊழியமானது அவரது ஞானஸ்நானம் மற்றும் அவர் தம் சோதனைகள் ஆகியவற்றால் முன்னுரைப் படுத்தப்பட்டுள்ளது. இயேசு யோர்தான் நதிக்கரையில் தோன்றி, யோவானிடத்தில் ஞானஸ் நானம் பெறுவதற்காகத் தண்ணீரில் இறங்கி நடந்த பொழுது, அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க யோவான் தயங்கியவராய், "நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?" (மத். 3:14) என்று கூறினார். அதற்கு இயேசு "இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத். 3:15) என்றுரைத்தார். இயேசு ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறின போது, தனிச்சிறப்பு வாய்ந்த இரு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பரலோகத்திலிருந்து அவருடைய பிதா, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்'' (மத். 3:17) என்ற வார்த்தைகளினால் முதன்முறையாக அவரைத் (இயேசுவை) தம் குமாரன் என்று வெளிப்படை யாக ஒப்புதல் அளித்தார், மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஒரு புறா வடிவில் அவர்மீது வந்திறங்கினார் (மத். 3:16). பரிசுத்த ஆவியானவர் யார் மீது இறங்கி வந்து தங்குவாரோ, அவரே தேவ குமாரன் என்று யோவானுக்குக் கூறப்பட்டிருந்தது (யோவா. 1:33). ஆகையால் இயேசுவின் ஞானஸ்நானம் தொடங்கி அதன் பின்பு, அவருடைய தெய்வீகத்துவத்திற்கு யோவான்

*சாட்சியளித்தார் (யோவா. 1:29).* இயேசுவின் ஞானஸ்நானமானது அவரது ஊழியத் தொடக்கத்தை அடையாளமாய்க் குறிப்பிட்டது.

இயேசுவின் ஞானஸ்நானத்தின் தனிச் சிறப்பானது நம்முடைய ஞானஸ்நானத்தின் தனிச் சிறப்பை நமக்கு நினைவூட்டுகின்றது. நமது ஞானஸ்நானம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கவனியுங்கள். பவுலின் கூற்றுப்படி, நாம் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சரீரமாகிய சபைக்குள்ளும் ஞானஸ்நானப்படுத்தப்படுகின்றோம். அவரது மரணம் மற்றும் அவரது மரணத்தின் பயன்கள் ஆகியவற்றுடனான ஐக்கியத்திற்குள் நாம் கொண்டு வரப்படுகின்றோம். பாவத்திற்கான நம்முடைய சொந்த ஆவிக்குரிய மரணத்திற்குள்ளாக நாம் ஞானஸ்நானப் படுத்தப்படுகின்றோம், பழைய பாவ மனிதன் நம்மிலிருந்து பிரிக்கப்பட்டு புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு உயிர்ப்பிக்கப் படுகின்றோம்.

தேவனுடைய மறுவுருவாக்கும் செயல்முறையின் இந்த நிலையின் வழியே *நீங்கள் கடந்து வந்துள்ளீர்களா?* நீங்கள் கிறிஸ்துவின் மரணத்திற் குள்ளாகவும், பாவத்திற்கான உங்கள் சொந்த ஆவிக்குரிய மரணத்திற் குள்ளாகவும் *நீங்கள் ஞானஸ்நானப் படுத்தப்பட்டிருக்கின்றீர்களா?*

## நிலை மூன்று: தங்கித் தரித்திருத்தல்

தேவனுடைய குறிப்பிடத்தக்க மறுவுருவாக்கச் செயல்முறையின் மூன்றாவது நிலையானது தங்கித் தரித்திருக்கும் நிலை என்று அழைக்கப் படலாம். நாம் மறுவுருவாக்கப்பட்ட பின்பு, நாம் மறுவுருவாக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும். தேவன் நமக்குப் புதிய ஜீவனைக் கொடுக்க முடியும், ஆனால் அதை நாம் வாழ வேண்டும். அவர் நம்மை (நே & நெ) சாலையில் அதாவது நேரான மற்றும் நெருக்கான சாலையில் இடமுடியும், ஆனால் நாம் அதில் நிலைத்திருக்க வேண்டும்.

ரோமர் 6ன் எஞ்சியுள்ள வசனங்களில், கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டுள்ள புதிய வாழ்வின் பண்புகளில் குறைந்தபட்சம் நான்கு பண்புகளை பவுல் அட்டவணைப்படுத்தினார். புதிய வாழ்வின் ஒவ்வொரு பண்பினமும் அன்றாடம் பராமரிக்கப்பட வேண்டும்.

முதலாவதாக, நாம் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய விடுதலையைப் பெற்றுள்ளோம் - நாம் பாவத்திலிருந்து விடுதலையாகியுள்ளோம் என்று பவுல் கூறினார். *''மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே'' (ரோமர் 6:7).* விடுதலை என்பது ஒரு பொதுவான சொற்றொடராகவும் அது உண்மையான அர்த்தத்தைப் பெறுவதற்கு முன் குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பப் பொருளைப் பெற வேண்டியதாகவும் உள்ளது. "நான் விடுதலையாயிருக்க விரும்புகிறேன்" என்று யாராவது ஒருவர் கூறும் பொழுது, நான் "எதிலிருந்து விடுதலை?" என்று கேட்க விரும்புவேன். ஒருவரும் வெறுமனே விடுதலையாயிருக்க முடியாது. அவர் வேலையி லிருந்து விடுதலையாயிருக்க விரும்புகின்றாரா? சட்டங்களில் இருந்தா? தூக்கத்திலிருந்தா? ஒருவர் ஏதேனும் ஒன்றிலிருந்து விடுதலையாயிருக்க

*வேண்டியதாயுள்ளது. பவுல், "விடுதலையாகுதல்," "விடுதலையாக்கப் பட்டிருத்தல்" மற்றும் "விடுதலை" ஆகிய வார்த்தைகளை ரோமர் 6ல் ஒரு சந்தர்ப்பப் பொருளாகத் தந்தார். நாம் கிறிஸ்துவுக்குள் பாவத்தில் இருந்து விடுதலையாய் இருப்பதாக - அதன் குற்ற உணர்விலிருந்து விடுதலையாகி இருப்பதாகப் பவுல் கூறினார் (ரோமர் 3:24; 6:3); அதன் பிடியிலிருந்து விடுதலை (6:17); மற்றும் அதன் அழிவு அல்லது ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலை (ரோமர் 6:21).*

*இரண்டாவதாக, இந்தப் புதிய ஜீவன் என்பது ஒரு புதிய ஐக்கியத்தினால் பண்பு படுத்தப்படுவதாக - நாம் தேவனுடன் ஐக்கியம் கொண்டிருப்பதாகப் பவுல் குறிப்பிட்டார். "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்" (ரோமர் 6:11) என்று அவர் கூறினார். இந்த வசனத்தில் இரண்டு எதிரிடைகள் காணப்படுகின்றன; ஒன்று மறைமுக மானதாகவும் மற்றும் இன்னொன்று விளக்கப் படுத்தப்பட்டதாகவும் உள்ளது. மறைமுகமான சத்தியமானது, நீங்கள் கிறிஸ்தவராகும் முன்பு தேவனுக்கு மரித்தவராக ஆனால் பாவத்திற்கு வாழ்பவராக இருந்தீர்கள் என்று கூறுகின்றது. விளக்கப்படுத்தப்பட்ட எதிரிடையானது, நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்ற வகையில் தேவனுக்கென்று வாழ்பவராகவும், பாவத்திற்கு மரித்தவராகவும் இருப்பதாகக் கூறுகின்றது. கிறிஸ்துவுக்குள் நீங்கள் தேவனு டன் ஒரு புதிய ஐக்கியத்திற்குள்ளாக, ஒரு புதிய உறவிற்குள்ளாக வந்துள்ளீர் கள். ஜெபிக்க ஒரு பரலோக பிதாவையும், ஒரு அன்பான மீட்பர் மூலம் அந்த ஜெபத்தை ஏறெடுக்கும் சிலாக்கியத்தையும் பெற்றிருக்கின்றீர்கள். தேவனுடைய இருத்தல், ஐக்கியம், ஆசீர்வாதங்கள், வாக்குத்தத்தங்கள் மற்றும் அவர் தருகின்ற ஆவிக்குரிய வாழ்வு ஆகியவற்றுடன் நீங்கள் ஜீவனுள்ளவராய் இருக்கின்றீர்கள்.*

*மூன்றாவதாக, கிறிஸ்துவுக்குள்ளான இந்தப் புது வாழ்வானது ஒரு புதிய கனி நிறைவான தன்மையினால் பண்புபடுத்தப்படுவதாகப் பவுல் விளக்கப்படுத்தினார்.*

> இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங் களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் [கனி] கிடைத்தது? அவைகளின் முடிவு மரணமே. இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்த மாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன் [கனி], முடிவோ நித்திய ஜீவன் (ரோமர் 6:21, 22).

*கிறிஸ்தவரல்லாதவர் ஒரு வகைக் கனியைக் கொண்டு வருகின்றார், ஆனால் அது அழியாத, பயன் நிறைந்த கனியாக இருப்பதில்லை - "ஏனெனில் அவைகளின் முடிவு மரணமே." கிறிஸ்தவரோ, வாழ்வின் சிறிய காலமானது கடந்து செல்லுகையிலும் நிலைத்திருக்கக் கூடிய கனியைக் கொண்டு வருகின்றார். அவர் கிறிஸ்தவப் பண்பு என்ற ஆவிக்குரிய கனியையும், நித்திய ஜீவன் என்ற "என்றென்றும் உள்ள" கனியையும் உண்டாக்கிக்*

கொள்பவராய் இருக்கின்றார். “தேவனுக்கு நாம் தருபவைகளை மட்டுமே நாம் வைத்துக் கொள்ளும்படிப் பெறுகின்றோம்” என்று யாரோ ஒருவர் கூறினார். நாம் கிறிஸ்துவில் ஜீவியம் மற்றும் ஊழியத்திற்கென்று நமது வாழ்வை முதலீடு செய்கின்றோம், அந்த முதலீட்டில் இருந்து அவர் கிறிஸ்தவப் பண்பு மற்றும் நித்திய ஜீவன் என்ற அழியாத கனியைக் கொண்டு வருகின்றார்.

நான்காவதாக, கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்வானது ஒரு புதிய எதிர்காலத்தினால் பண்புபடுத்தப்படுவதாக பவுல் கூறினார்: “பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்” (ரோமர் 6:23). கிறிஸ்தவர் பரலோகத்திற்குச் செல்லும் தமது வழியில் இருக்கின்றார். அவர் ஜீவ புத்தகத்தின் கடைசி அத்தியாயமான வேதாகமத்தை வாசித்துள்ளார், மற்றும் கர்த்தர் பக்கமே வெல்லும் என்பதை அவர் அறிந்துள்ளார். இந்த உலகத்தில் அவர் உபத்திரவப்படலாம், காயப்பட்டு மற்றும் சில காலங்களில் புண்ணாக்கப்படலாம், ஆனால் அவர், நிறைவான வெற்றி தம்முடையதே என்று அறிந்துள்ளார்.

நேர்மையான இருதயமும் நல்வாழ்வு வாழும் விருப்பமும் கொண்டுள்ள எவருக்கும் கிறிஸ்துவுக்குள் உள்ள வாழ்க்கை என்பது வசீகரமுடையதாக உள்ளது. நாம் கிறிஸ்தவராகும் பொழுது ஒரு புது வாழ்வு - பாவத்தில் இருந்து விடுதலையான வாழ்வு, அவருடன் ஐக்கியப் பட்ட வாழ்வு, கனி நிறைந்த தன்மையுள்ள வாழ்வு, மற்றும் நித்தியமான எதிர்காலத்தில் பரலோகத்தில் ஒரு வாழ்வு - நம்முடையதாகின்றது.

புதிய வாழ்வானது பாதுகாக்கப்பட்டு, பராமரிக்கப்பட வேண்டும். உங்களுக்குச் சொந்தமாக ஓட்டவும் மகிழ்வுடன் அனுபவிக்கவும் புதிய கார் ஒன்று தரப்படுகிறதென்று வைத்துக் கொள்வோம். அதைச் சற்றுக் காலம் மகிழ்வுடன் அனுபவிக்க நீங்கள் விரும்பினால் அதைப் பராமரிக்கும் பொறுப்புடையவர்களாய் இருப்பீர்கள். நீங்கள் அதை எச்சரிக்கையாக ஓட்டாவிட்டால், அதன் என்ஜின் பகுதியைக் கவனிக்காவிட்டால், அதன் டயர்களில் காற்றைச் சரியாகப் பராமரிக்காவிட்டால், மற்றும் அதற்கு எரிபொருளை நிரப்பாவிட்டால், அந்தக் கார் நீண்ட நாட்களுக்கு உபயோகிக்கும்படி உங்களுடையதாயிராது.

கிறிஸ்தவர், பாவத்திலிருந்து தாம் பெற்ற விடுதலையைக் காத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. அவர் தம் சிந்தையைத் தெளிவாய்க் காத்துக் கொண்டு, தீமையானது தம் வாழ்வை ஆளுகை செய்யத் திரும்பி வர அனுமதிக்காமல் இருக்க வேண்டியுள்ளது. அவர் ஜெபம், வேத பாட வகுப்பு/வேதப் படிப்பு, மற்ற கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் மற்றும் தேவனு டன் அன்றாடம் நடத்தல் ஆகியவற்றினால் தேவனுடன் தமது ஐக்கியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். அவர் வளருவதற்கு கடும் முயற்சி செய்தல், மற்றவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்த நாடுதல், மற்றும் தம்மிலும் மற்றவர்களிலும் பண்பைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றினால் தொடர்ந்து கனியுண்டாக்க வேண்டும். அவர் நித்திய வாழ்விற்கான தமது நம்பிக்கையைத் தம் இருதயத்தில் பிரகாசமாய் அதை எரியச் செய்வதனைக்

காத்துக் கொள்வதினால் உறுதிப்படுத்த வேண்டும்.

## முடிவுரை

இன்றைய நாளில் நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய நபராயிருக்க முடியும். தேவன் தம்முடைய வசனத்தின் மூலமாக அவருடைய குறிப்பிடத் தக்க செயல்முறைக்கு உங்களை ஒப்புக் கொடுத்து அதன் மூலம் அவர் உங்களை மறுவுருவாக்கவும் உங்களுக்கு அவர் கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனைக் கொடுக்கவும் உங்களைக் கேட்கின்றார். அவரது செயல்பாட்டில் பிரிதல், இரட்சிப்பு மற்றும் தங்கித்தரித்திருத்தல் ஆகியவை அடங்கி யுள்ளன. ஒவ்வொரு நிலையும் தனிச் சிறப்புள்ளதாகவும் இன்றியமை யாததாகவும் உள்ளது.

கிறிஸ்துவுக்குள் இந்தப் புதிய வாழ்வைப் பெற்றிருத்தல் எப்படி யிருக்கும் என்று மாத்திரம் சிந்தித்துப் பாருங்கள்! ஒருவேளை, சில நாட்களுக்கு நீங்கள் வீட்டை விட்டு வெளியே சென்று, மீண்டும் திரும்பும் பொழுது, நீங்கள் வீட்டில் இல்லாத அந்த நாட்களில் யாரோ ஒருவர் வந்து ஒவ்வொன்றையும் புதிதாக்கி, உங்கள் வீட்டைப் புத்தம் புதியதாக்கி யிருப்பதை நீங்கள் கண்டறிய நேரிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் என்ன செய்வீர்கள்? ஒருவேளை நீங்கள் வீடு முழுக்க ஓடிச் சென்று ஒவ்வொன்றையும் பரிசோதிப்பீர்கள். நீங்கள் புதிய நாற்காலிகளையும், புதிய மேசைகளையும், புதிய படுக்கைகளையும், புதிய துண்டுகளையும், புதிய உடைகளையும், புதிய காலணிகளையும், புதிய உபயோகப் பொருட்களையும், புதிய கம்பளங்களையும் மற்றும் தரை விரிப்புகளையும் மற்றும் பல புதிய பொருட்களையும் காண்பீர்கள். உங்களின் புதிய உடைமைகளைப் பார்த்து நீங்கள் மனக்கிளர்ச்சியடைய மாட்டீர்களா? நிச்சயமாகவே நீங்கள் மகிழ்ச்சியாலும், உணர்வுப் பெருக்காலும் மூழ்கடிக்கப்படுவீர்கள்!

பெரும்பாலும் இதைப் போன்ற அனுபவம் உங்களுக்கோ அல்லது எனக்கோ ஒருக்காலும் ஏற்படாது. நீங்கள் எப்பொழுதாவது வீட்டிற்குச் சென்று யாரோ ஒருவர் உங்கள் வீட்டுப் பொருட்கள் மற்றும் உடைகள் ஆகியவற்றை ஒவ்வொன்றையும் புத்தம் புதியவைகளாய் மாற்றி வைத்திருப் பதைக் காணக் கூடிய சாத்தியக் கூறு மிக மிகக் குறைவாகும். புதிய உடைமைகளாக எல்லாவற்றையும் கொண்டிருப்பதைக் காட்டிலும் வேறு சில விஷயங்களைப் புதியதாகக் கொண்டிருக்கக் கூடிய சாத்தியக் கூறு மிக மிக அதிகமானதாகும்: நீங்கள் ஒரு புதிய நபராகக்கூடும். இன்றைய நாளில் நீங்கள் தேவனுடைய தெய்வீகச் செயல் முறையினால் மறுவுருவாக்கப்பட முடியும்.

தேவனுடைய புதிய ஜீவனைப் பெற்றுக் கொண்ட மக்களால் சபையானது ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் புதிய - ஜீவனின் குடும்பமாய் உள்ளனர். தேவன் உங்களைப் புதிய நபராக்கும் அதே வேளையில் அவர் உங்களைத் தமது சபையில் வைக்கின்றார். தேவனுடைய மறுவுருவாக்கும் செயல்முறைக்கு இன்றே நீங்கள் உங்களை ஒப்புக்

*கொடுப்பதினால் ஏன் இந்தப் புதிய ஜீவனின் குழுவினுள் பிரவேசிக்கக் கூடாது?*

## படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. *Neos மற்றும் kainos என்ற கிரேக்க வார்த்தைகளுக்கு இடையே உள்ள வேறுபாடு என்ன? இந்த வேறுபாட்டை 2 கொரி. 5:17க்கு நடைமுறைப்படுத்தவும்.*
2. *நாம் கிறிஸ்தவர்களாவதற்கு முன்பு எந்தக் கருத்தில் நாம் மரித்தவர்களாயிருந்தோம்?*
3. *ரோமர் 1-8க்கு ஒரு சுருக்கப் புறக்குறிப்பைத் தரவும்.*
4. *"கிருபை பெருகும்படிக்குப் பாவத்தில் நிலை நிற்கலாமா?" என்ற கேள்வியினால் பவுல் எதை அர்த்தப்படுத்துகின்றார் என்று கூறவும் (ரோமர் 6:1).*
5. *பாவத்திற்கான நமது மரணமானது எப்பொழுது அல்லது எந்த இடத்தில் நிறைவடைகின்றது?*
6. *பாவத்திலிருந்து பிரிதல் என்பது எவ்விதம் மனமாற்றச் செயல் முறையில் கொண்டு வரப்படுகின்றது?*
7. *பிரிதல் நிலையானது விட்டுவிடப்பட்டால் ஒருவரின் மனமாற்றத்தைப் பற்றிய உண்மை என்ன?*
8. *நாம் எவ்விதமாகக் கிறிஸ்துவுக்குள்ளாகின்றோம்?*
9. *Baptizo என்ற கிரேக்க வார்த்தையின் அர்த்தம் என்ன?*
10. *ரோமர் 6:4ல் நாம் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம் என்று பவுல் கூறிய பொழுது, அவர் அர்த்தப்படுத்தியது என்ன?*
11. *ரோமர் 6:1-4ல் பவுல் குறிப்பிட்ட ஞானஸ்நானத்தின் நான்கு பண்புகளை அட்டவணைப்படுத்தவும்.*
12. *ரோமர் 6:7ன்படியாக கிறிஸ்துவுக்குள் நமக்கு எவ்வகையான சுயாதீனம் அளிக்கப்பட்டுள்ளது?*
13. *"தேவனுக்கென்று பிழைத்தவர்களாய்" இருத்தலைப் பவுல் குறிப்பிட்ட பொழுது அவர் அர்த்தப்படுத்தியது என்ன?*
14. *கிறிஸ்தவர் எவ்விதக் கனிகளை (வெளிக்) கொண்டு வருகின்றார்?*
15. *கிறிஸ்தவர் கொண்டுள்ள எதிர்காலம் என்ன? அதை விவரிக்கவும்.*